# ஒதுக்கீட்டுத் தலைப்பு 184 தனியார் போக்குவரத்துச் அமைச்சினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 11 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணியிருக்காமை

நி.பி. 477 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சினால் வாக்குப்பணப் பேரேடு நாளதுவரையாக பேணிவரப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 729,050,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 301,382,309 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்புக்கள் ரூபா 427,667,691 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 58.66 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விபரம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டு வருபவை | 479,000,000 | 481,275,000 | 246,093,737 | 51.13 |
| மூலதனம் | 229,000,000 | 247,775,000 | 181,573,954 | 73.28 |
| மொத்தம் | 708,000,000 | 729,050,000 | 427,667,691 | 58.66 |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

18401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1,800,000 | 669,708 | 600,000 | 778,823 | 5,500,000 | (109,115) |

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று அமைச்சினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 1.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 யூலை 31 ஆந் திகதியன்றே வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்

நிறுவனமொன்றிற்குச் சொந்தமான வாகனமொன்று தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்வாகனத்தின் உரித்தினை முறையாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சிற்கு உரித்தற்ற மேலும் இரண்டு வாகனங்கள் இவ்வமைச்சின் கீழ் காணப்படுவதுடன் அவற்றை முறையாக கையேற்பதற்கு அல்லது அவ்வாகனங்களிற்கு உரித்தான அமைச்சுக்களிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) திர்க்கப்படாத பொறுப்புக்கள்

(i) 2013 ஆம் ஆண்டின் முதல் 03 மாதங்களிற்கான உறுதிச்சீட்டுக்களின் பரிசோதனையில் 2012 ஆம் ஆண்டிற்காக 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 75,726 மொத்தமான 05 பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ii) நி.பி. 94 (1) இன் பிரகாரம் வேறு வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்த்து வருடாந்த மதிப்பீடுகளில் அதற்காக நிதி ஏற்பாடு காணப்பட்டால் அன்றி எந்தவொரு திணைக்களத்தினாலும் வேலை அல்லது சேவை அல்லது வழங்கல் ஒன்றிற்காக எவ்வித செலவினத்திற்கும் அல்லது பொறுப்பிற்கும் கடப்பாட்டினை ஏற்படுத்திக்கொள்ளலாகாது என்பதுடன் அவற்றிற்காக செய்யப்படுகின்ற பொறுப்புக்கள் மற்றும் செலவினத் தொகை எந்தவொரு நிலையிலும் நிதி ஆண்டிற்கான நிதிஏற்பாட்டுத் தொகைக்கு மேற்படுதலாகாது என்றிருப்பினும் 14 செலவின விடயங்களிற்கு ரூபா 3,859,841 ஆல் நிதி ஏற்பாட்டிற்கும் மேலாக பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

2009 யூன் 17 ஆந் திகதிய 19/2009(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2(1) ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சின் பதவியணியினர், அமைச்சின் செயலாளர்கள், நிறுவகத் தலைவர்கள் அடங்கலான சகல அரசாங்க ஊழியர்களும் தனது சேவை நிலையித்திற்கான வருகைதருதல் மற்றும் வெளிச்செல்லை கைவிரல் அடையாளமிடல் இயந்திரத்தினால் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் அமைச்சரின் பதவியணியின் உத்தியோகத்தர்கள் கைவிரல் அடையாளமிடல் இயந்திரத்தினை பயன்படுத்தியிருக்கவில்லை.

## 1.7 செலாற்றல்

(அ) திட்டமிடல்

(i) பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைவாக செயற்பட்டிருக்கவில்லை.

- தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சினால் 2012 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், இவ்விலக்குகளை அடைந்துகொள்வதற்கு தவறியிருந்தது.
- 2012 ஆம் ஆண்டில் 04 பேரூந்து நநிர்மாணிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 07 பேரூந்து தரிப்பிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை தொடங்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை 03 பேரூந்து தரிப்பிடங்களின் நிர்மாணங்கள் மாத்திரம் முடிவுறுத்தப்பட்டு திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.
- 33 உத்தியோகத்தர்களை மீளாய்வாண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதியில் பயிற்றுவிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியவில் எந்தவொரு உத்தியோகத்தரும் பயிற்றுவிக்கப் பட்டிருக்கவில்லை.
- நீண்டதூரப் பயண 02 பயணிகள் ஓய்வெடுத்தல் நிலையங்களை (மஹஓய மற்றும் வாகரை) நிர்மாணிப்பதற்காக இலக்கிடப்பட்டிருந்த போதிலும், இவ்விரண்டு நிலையங்களினதும் ஆரம்ப வேலைகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

**1.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் அமைச்சர் உள்ளிட்ட பதவியணியினருக்காக 08 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கையில் குழாம் வாகனமொன்று அமைச்சரின் ஊடாகப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 312,470 தொகை எரிபொருளிற்காக மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது.

**1.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 08 | 06 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 34 | 20 | 14 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 15 | 14 | 01 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| (vi) | அமைச்சரின் பதவியணி | 15 | 15 | - | - |
| | மொத்தம் | 73 | 57 | 18 | 02 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 18 வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.